சி.பி.ஐ விசாரணை கேட்கும் எடப்பாடிகளுக்கு ஜெயலலிதா வழங்கிய அறிவுரைகள் என்ன?....

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், 40-க்கு 40 இடங்களில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி அமோக வெற்றி பெற்றது. தோல்வியில் மண்ணைக் கவ்விய அ.தி.மு.க, கூட்டணிக் கட்சிகளும், பா.ஜ.க. கூட்டணிகளும் பித்துப் பிடித்த நிலையில் தமிழக வீதிகளில் ஒப்பாரி வைத்துத் தலைவிரிக் கோலமாக அலைகின்றன.

கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரத்தில், அரசியல் ஆதாயம் தேடுவதற்காக எடப்பாடிகளும், அன்புமணி இராமதாசுகளும் தமிழிசைகளும், அண்ணாமலைகளும் வரிந்து கட்டிக் கொண்டு வசைபாடி நிற்கிறார்கள். இவ்விவகாரத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் பலர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இறந்த குடும்பத்தினருக்கு நிவாரண நிதி தந்ததுடன், பெற்றோரை இழந்த பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி வாழ்க்கைப் பொறுப்பை அரசு ஏற்றுள்ளது. அத்துடன் மாவட்ட ஆட்சியர் மாற்றம், காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் இடைநீக்கம், மதுவிலக்குத் துறை துணை இயக்குநரகத் தலைவர் கட்டாயக் காத்திருப்பில் வைத்திருப்பு, கள்ளச்சாராயம் ஒழிப்புத் தீவிர நடவடிக்கை, இவ் விவகாரத்தை விசாரிக்க நீதியரசர் கோகுல்தாஸ் தலைமையில் விசாரணை ஆணையக் குழு அமைப்பு, சி.பி.சி.ஐ.டி. பிரிவினர் கள்ளச் சாராயச்சாவு குறித்த விவகாரத்தை விசாரிக்க உத்தரவு என முதல்வர் தளபதிஅனைத்து விதமான கட்டளைகளைப் பிறப்பித்துள்ளார்.

ஆனால் விக்கிரவாண்டி இடைத்தேர்தலை மனதில் கொண்டு, எடப்பாடிகள் கூட்டம் நாள்தோறும் கருப்பு சட்டை அணிந்து வந்து, சட்டமன்றத்தை முடக்க கலகம் செய்து வருகிறது. அண்ணாமலை, தமிழிசை போன்றோர் தமிழ்நாடு ஆளுநரைச் சந்தித்து முறையிட்டு வந்துள்ளனர். தமிழ்நாடு முதல்வர் இவ்விவகாரத்தில், அரசு எடுத்த அனைத்து முடிவுகளையும் எடுத்துக் கூறியும், தங்களது ஆணவ, அராஜகப் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை.

இவ் விவகாரத்தில் அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று தொடர்ந்து முறையிடுகிறார்கள். ஒன்றிய அரசு நடத்தும் மோடியின் ஆட்சியிலும், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களிலும், பல்வேறு சம்பவங்களில் இது போன்ற சி.பி.ஐ. விசாரணை கேட்டு அண்ணாமலையும் தமிழிசையும் மற்றவர்களும் கொடி பிடித்தார்களா?, கோஷம் போட்டார்களா? அதைப்போல அ.தி.மு.க. ஆட்சியில், ஜெயலலிதா, எடப்பாடி முதலமைச்சராக இருந்தபோது இது போன்று நடைபெற்ற சம்பவங்களுக்கு எல்லாம் ,எப்போது சி.பி.ஐ. விசாரணை நடத்திட முன் வந்தார்கள் .....?

நடைபெற்ற துயரச் சம்பவத்தை யாரும் நியாயப்படுத்த முன் வரவில்லை. அதே நேரத்தில் தேவையான நிருவாக ரீதியாகச் சட்ட நடவடிக்கைகளைத் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் எடுத்து வருகின்றார். இருந்தாலும் அதனை புறக்கணித்துவிட்டு அநீதி முறையில் போராட்டங்கள் நடத்தி, சி.பி.ஐ. புலன் விசாரணை கோரும் கட்சிகள், விவகாரத்தை கையில் எடுத்துக் கொண்டு, தேவையற்ற முறையில், காந்தாரித்தனமாகப் பெரிதாக்கி வருகின்றன. நீதி விசாரணையை சி.பி.ஐ.க்கு விட வேண்டும் என்று கூறுவது எந்த விதத்தில் நியாயம்? என்பதைச் சிந்திக்க வேண்டும்!

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணை கோரும் எடப்பாடிகள், அவர்களுடைய அம்மா புரட்சித் தலைவி ஜெயலலிதா (?) முதல்வராக இருந்த போது, திருச்செங்கோடு காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளராக இருந்த விஷ்ணுபிரியாவின் மரணம் குறித்து, திமுக தலைவர் கலைஞர் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள்கள் சி.பி.ஐ. விசாரணை கேட்டனர். அவ்வாறே விஷ்ணுபிரியாவின் தந்தை ஓய்வு பெற்ற காவல் துறை கண்காணிப்பாளர் ரவியும் கேட்டார். சட்டமன்றத்தில் காவல்துறை மானியத்தில் தி.மு.க. உறுப்பினராக இருந்த எ.வ.வேலு, டி.எஸ்.பி. விஷ்ணு பிரியா சாவு விவகாரத்தில் சி.பி.ஐ. விசாரணை கேட்டுப் பேசினார். அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா குறுக்கிட்டு சிபிஐ விசாரணை தேவையில்லை என்று நீண்ட விளக்கத்தைத் தந்தார். இதோ அவர் பேசிய அந்த அவை நடவடிக்கைகளை அப்படியே தருகிறேன்.

கவிஞர்
தமிழ்தாசன்
தி.மு.க.
தீர்மானக் குழுத் தலைவர்

சி.பி.ஐ. விசாரணை குறித்து முதல்வராக இருந்த ஜெயலலிதா கூறியது என்ன?

“மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துணை கண்காணிப்பாளர் செல்வி விஷ்ணு பிரியா தற்கொலை குறித்து, தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு உண்மையைக் கண்டறிய ஏதுவாக இவ்வழக்கு தற்போது மாநிலக் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்குடன் விஷ்ணு பிரியா புலன் விசாரணை செய்து வந்த கோகுல்ராஜ் கொலை வழக்கும் மாநிலக் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அப்பிரிவினர் இவ்வழக்குகளில் தொடர்ந்து புலன் விசாரணை மேற்காண்டு வருகின்றனர். எனவே செல்வி விஷ்ணு பிரியா தற்கொலை குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு விட எந்த அவசியமும் எழவில்லை. சி.பி.ஐ. விசாரணைத் தான் சரியான பாதையில் இருக்கும் என்பதும், சி.பி.சி.ஐ.டி. விசாரணை அவ்வாறு இருக்காது எனக் கூறுவதும் தவறான கருத்து என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்பகிறேன்.

சிறுவன் தில்ஷன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கு, தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த உமா மகேஸ்வரி கொலை, மருத்துவர் எம்மா கொன்சால்வஸ் கொலை போன்ற வழக்குகள் சி.பி.சி.ஐ.டி. பிரிவால் சரியாக புலன் விசாரணை செய்யப்பட்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இங்கே நான் சுட்டிக்காட்டியது ஒரு சில உதாரணங்கள்தான். சி.பி.ஐ. விசாரணை மட்டுமே நேர்மையான விசாரணை என்ற கருத்து சரியானது அல்ல. அகில இந்திய அளவில் பரபரப்பாக உள்ள ஒரு முக்கிய வழக்கில் சி.பி.ஐ. முன்னாள் இயக்குநர் மீதே குற்றம் சுமத்தப்பட்டு, உச்ச நீதிமன்ற விசாரணையிலும் அது உள்ளது என்பதை இங்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் தமிழகத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட ஒரு சில வழக்குகள் உச்ச நீதிமன்ற உத்தரவிற்குப் பிறகே சி.பி.ஐ.-ஆல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதையும் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். வெளிநாட்டுக் கார் இறக்குமதி வரி ஏய்ப்புத் தொடர்பான வழக்கில் தமிழகத்தில் ஒருவரை சுமார் 1 வருடங்களுக்கு முன்னால் சி.பி.ஐ. கைது செய்து, விசாரணை செய்தது. அந்த வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ளது.

ஆனால் அதே குற்றச்சாட்டுக்கு உள்ளான வேறு சிலரை சி.பி.ஐ. கைது செய்யவில்லை. வழக்கறிஞர் திரு. சங்கர சுப்பு அவர்களது மகன் கொல்லப்பட்ட வழக்கை சி.பி.ஐ. விசாரணை செய்து, வழக்கை முடிவுக்கு கொண்டு வர கோரியது. இதனை எற்றுக்கொள்ளாத சென்னை உயர் நீதிமன்றம், 07-12-2012 தேதியில் பணி நிறைவு செய்த காவல் துறை உயர் அதிகாரி ராகவன் தலைமையில் விசாரணை நடத்த உத்தரவிட்டு, அந்த விசாரணை இன்னமும் நிலுவையில் உள்ளது. உடுமலைப்பேட்டை காவல் துறையினரால் சந்திரா என்பவர் துன்புறுத்தப்பட்டதாக சொல்லப்பட்டக் குற்றச்சாட்டில் சென்னை உயர் நீதிமன்றம், 24-09-2014 அன்று சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது. சுமார் 1 வருடத்திற்குப் பின்னரும் சி.பி.ஐ. இந்த விசாரணையை முடிக்கவில்லை. எனவே, சி.பி.ஐ. விசாரணையே சரியானதாக இருக்கும் எனச் சொல்லப்படுவது ஒருவருடைய தனிப்பட்ட கருத்துதானே தவிர, உண்மை நிலையின் அடிப்படையில் சொல்லப்படுவது அன்று. எனவே, இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு உட்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.

விஷ்ணு பிரியா தற்கொலை வழக்கானது சி.பி.ஐ. விசாரிக்கும் அளவுக்கு மிக சிக்கலான வழக்கு அல்ல. சி.பி.சி.ஐ.டி. - யே இந்த வழக்கை நடுநிலையுடன் விரைவாகப் புலன் விசாரணையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.” (தமிழ்நாடு சட்டமன்றம் செப்டம்பர் 22, 2015)

சி.பி.ஐ. விசாரணை கோரும் எடப்பாடி தலைமையில் ஆன அ.தி.மு.க.வினர் இதற்கு என்ன பதில் கூறப் போகிறார்கள்?

கும்பகோணம் - திருவாரூர் நெடுஞ்சாலையில்

திருநரையூர் - நாச்சியார் கோயிலுக்கு புறவழிச் சாலை அமைக்கப்படுமா?

பேரவையில் அரசு கொறடா கோவி.செழியன் கேள்வி!

சென்னை, ஜூன் 27-

கும்பகோணம் - திருவாரூர் நெடுஞ்சாலையில் திருநரையூர் - நாச்சியார் கோயிலுக்கு புறவழிச்சாலை அமைக்கப்படுமா என்று பேரவையில் அரசு கொறடா கோ.வி.செழியன் கேள்வி எழுப்பினார்.

இது பற்றிய விவாதம் வருமாறு:-

கோவி. செழியன்: கும்பகோணம், திருவிடைமருதூர் ஆகிய இரண்டு தொகுதிகளும் இணைந்த தொகுதிகளாகும். இந்த இரண்டு தொகுதிகளிலிருந்தும் திருவாரூர் செல்ல வேண்டுமேயானால், கிருஷ்ணாபுரம், திருநரையூர், நாச்சியார் கோவில், மாத்தூர் ஆகிய ஊராட்சிகள் வழியாகத் தான் செல்ல வேண்டும். இந்த நான்கு ஊராட்சிகளிலும், மக்கள் தொகை அதிகமாகவும், போக்குவரத்து நெரிசல் அதிகமாகவும் இருக்கின்றன. நாச்சியார் கோவில் குத்துவிளக்குகள் உற்பத்தியில் மிகவும் புகழ் பெற்ற ஊராகும். எனவே, பள்ளிகள், கல்லூரிகள் துவங்குகின்ற, முடிகின்ற வேளைகளிலும், அரசு அலுவலர்கள் வேலைக்கு வந்து, செல்லும் நேரங்களிலும் மிகுந்த இடர்பாடு ஏற்படுகிறது. எனவே, அமைச்சர் அவர்கள், கிருஷ்ணாபுரத்திலிருந்து மாத்தூர் வரை இணைக்கக்கூடிய புதிய புறவழிச் சாலையை அமைத்துத் தந்தால், கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்கின்ற பயணிகளுக்கு வசதியாக இருக்கும். நல்ல பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்ற இவ்வரசு இந்த புதிய பாதையை அமைத்துத் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் எ.வ.வேலு: நம்முடைய சட்டமன்ற அரசுக் கொறடா முனைவர் கோவி. செழியன் அவர்கள் தன்னுடைய கேள்வியிலேயே, நான்கு ஊராட்சிகளை உள்ளடக்கி அந்தப் பாதை போகின்றது என்று சொன்னார்கள். ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், கிராமச் சாலைகள் என சாலைகளிலே பல்வேறு வகைபாடுகள் இருக்கின்றன.

மாநில நெடுஞ்சாலையைப் பொறுத்தளவிற்கு மாநில நெடுஞ்சாலைத் துறை, அதேபோன்று மாவட்ட முக்கிய சாலை, மாவட்ட இதர சாலை என்ற அடிப்படையில் 3 வகைப்படுத்தப்பட்ட சாலைகள்தான் நெடுஞ்சாலைத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கிறது. எனவே அந்த 4 ஊராட்சிகளை இணைக்கிற சாலையில் ஒரு புறவழிச் சாலை அமைக்க முடியுமா என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். எனவே, அந்தக் கேள்வியையே நான் மனுக்களாக எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை அழைத்து, இங்கு புறவழிச் சாலை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கிறதா, நெடுஞ்சாலைத் துறையின்மூலம் அமைக்க முடியுமா அல்லது ஒன்றியத்தின்மூலம் அமைக்க முடியுமா என்பதை ஆய்வு செய்து, நெடுஞ்சாலைத் துறைமூலம்தான் அமைக்க முடியும் என்று சொன்னால், இந்த ஆண்டே அதற்கான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு அரசின் சார்பாக ஆணையிடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

காளையார் கோவிலில்

மாமன்னர் முத்து வடுக நாதரின் 252 வது நினைவு தினம்!

சிவகங்கை , ஜூன் 27-

சிவகங்கையில் ஆட்சி புரிந்த ராணி வேலுநாச்சியார் கணவர் சசிவர்ண முத்து வடுகநாதர். சிவகங்கையின் இரண்டாவது மன்னராவார். நாட்டின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயரை எதிர்த்து போராடி காளையார் கோவிலில் வீர மரணம் அடைந்தார். அவரது தியாகத்தினை போற்றும் வகையில் காளையார் கோவிலில் தமிழக அரசின் சார்பில் நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. அவரது 252வது நினைவு தின நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

அவரது நினைவிடத்தில் சிவகங்கை ராணி டி.எஸ். கே.மதுராந்தகி நாச்சியார் வேலுநாச்சியார் மக்கள் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் அங்குசாமி, வீரசேகர், செல்வம், வேலுநாச்சியார் நிர்வாகி அறக்கட்டளை நிர்வாகி மணிமுத்து, தேவஸ்தான மேலாளர் பா. இளங்கோ, வழக்கறிஞர் குமரகுரு ,போஸ் சேதுபதி, உட்பட ஏராளமானவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது.

கூடலூர் நகர முன்னாள் நகரமன்றத் தலைவர்

சின்னா தேவர் மனைவி அமராவதி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

தேனி, ஜூன் 27 -

தேனி மாவட்டம் கூடலூர் முன்னாள் நகர மன்றத் தலைவர் சின்னா தேவர் அவர்களின் மனைவியும், கூடலூர் நகரக் கழகச் செயலாளர் லோகன் துரையின் தாயாருமான அமராவதி அவர்கள் மறைவெய்தினார். அவருக்கு கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக, உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அஞ்சலி செலுத்தினார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குமாரபாளையம் ஜெ.கே.கே.சுந்தரம்
ஜூன் 27 (2005)

சிறு வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். இலங்கையில் வசித்தபோது கொழும்புவில் கிளைக் கழகச் செயலாளராகவும், தாயகம் திரும்பிய பின் 1970ஆம் ஆண்டில் ஒன்றுபட்ட சேலம் மாவட்டத்தின் செயற்குழு உறுப்பினராகவும், கழக சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் 2004ல் கோவையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் “அண்ணா விருது” பெற்றவர்.

“நான் பதவியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழகத்தின் எந்தப் பகுதிக்கு சுற்றுப்பயணம் செய்தாலும், தன் காரிலேதான் நான் பயணம் செய்யவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பார்” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

நீட் நுழைவுத் தேர்வு முறைகேடு விவகாரம்!

ஒன்றிய அரசு நியமித்த குழு டெல்லியில் ஆலோசனை!

புதுடெல்லி, ஜூன் 27-

நீட் தேர்வு முறைகேடுகளை விசாரிப்பதற்கும், தேசிய தேர்வு முகமையை மாற்றி அமைப்பதற்கும் ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட குழுவின் ஆலோசனை கூட்டம் டெல்லியில் தொடங்கி நடைபெற்று வருகிறது.

நாடு முழுவதும் நடைபெற்ற நீட் தேர்வில் பெருமளவு முறைகேடுகள் நடைபெற்றன. கேள்வித்தாள் கசிவு, மாணவ, மாணவிகளிடம் லட்சக்கணக்கில் பணம் பெற்று கொண்டு ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதியது உள்ளிட்ட மோசடிகள் அரங்கேறின. நீட் முறைகேட்டைக் கண்டித்து நாடு முழுவதும் மாணவர்கள், அரசியல் கட்சியினர் உள்ளிட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனையடுத்து நீட் தேர்வு முறைகேடுகள் குறித்து சி.பி.ஐ., விசாரணைக்கு ஒன்றிய அரசு உத்தரவிட்டது. முதுநிலை மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வையும் ரத்து செய்து ஆணையிடப்பட்டது.

தொடர்ந்து, நீட் தேர்வு முறைகேடுகளை விசாரிப்பதற்கும், தேசிய தேர்வு முகமையை மாற்றி அமைப்பதற்கும் ஆலோசனை வழங்க இஸ்ரோ முன்னாள் தலைவர் ராதாகிருஷ்ணன் தலைமையிலான குழு ஒன்றையும் ஒன்றிய அரசு நியமித்தது. இந்நிலையில், இந்த குழுவின் ஆலோசனை கூட்டம் டெல்லியில் தொடங்கி நடைபெற்றது.



சட்டப்பேரவையில் குறள்!

சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம், பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் படித்த குறளும் அதற்கான கலைஞர் உரையும் வருமாறு:-

குறள்:

**“மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.”**

கலைஞர் உரை: பிறருக்கு உதவிடும் பெருந்தன்மையாம் ஒப்புரவு உடையவனிடம், செல்வம் சேர்ந்தால் அது ஒரு நல்ல மரத்தின் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுவது போன்றதாகும்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியன்
ஜூன் 27 (2020)

தனது இளமைப் பருவத்திலேயே தீவிர கழகப் பணியாற்றத் தொடங்கி 1961ஆம் ஆண்டு நெல்லையில் நடைபெற்ற மாவட்ட தி.மா.மு.க. மாநாட்டுப் பொருளாளராகவும், 1965ல் நெல்லை மாவட்டம், அய்யாபுரம் கிளைச் செயலாளராகவும், தலைமை இலக்கிய அணித் தலைவராகவும், கழக வெளியீட்டுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கவித்திறன், உரைநடை வீச்சு, சிறுகதைச் சிறப்பு, நாடக ஊடகம், இலக்கிய ஆய்வு, அரங்கங்களை ஆட்கொள்ளும் சொற்பொழிவு அத்துணையிலும் முத்திரை பதித்த இவர், பாவேந்தர் பாரதிதாசன் திருக்கரத்தால் ‘பகுத்தறிவுப் பாவலர்’ எனும் பட்டம் பெற்றவர்.

“கழக வளர்ச்சிப் பணிகளில் இளமைக் காலம் தொட்டு ஈடுபாடு கொண்டு தொடர்ந்து தொண்டாற்றி வருபவர். அவரது எழுத்தாற்றல், இலக்கிய ஆய்வுத் திறன், கவித்திறன் முதலிய பல்வேறு திறன்களும், கழக வளர்ச்சியில் அவர் கொண்டுள்ள ஈடுபாடும் இளைஞர் சமுதாயத்திற்குத் திசைகாட்டும் ’’ என்று பாராட்டிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2005ஆம் ஆண்டு, தலைமைக் கழகத்தின் சார்பில் ‘பாவேந்தர் விருதினை’ வழங்கி சிறப்பித்தார்.

7வது உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட இவர், தமிழக அரசின் சார்பில் ‘பாவேந்தர் பாரதிதாசன்’ நூற்றாண்டு பாவேந்தர் விருது கலைஞர் கரத்தால் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.